**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. C.C. No. 26/2019**

| | | | | |
|---|---|---|---|---|
| Deposition of Witness | LW 3 | Examined as : PW 7 | | |
| Name | : Elangovan | Defence | : | |
| Father Name | ; Rajendran | Court | : | |
| Village | ; Keezha Uthirangudi | Taluk | : | |
| Calling | ; | Religion | : | |
| Age | ; 35 | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 18.05.2022

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

முதல் விசாரணை

நான் சங்கரன்பந்தல் கீழ உத்திரங்குடியில் வசிக்கிறேன். நான் டிரைவராக பணிபுரிகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். இந்த வழக்கு விபத்தில் இறந்த அசா1ன் மகன் வெங்கடேசன் என்பவர் என்னுடன் காய்கறி வியாபாரம் செய்து வந்தார். கடந்த 14.09.2014 அன்று டாடா ஏசி வாகனத்தில் காய்கறி வாங்குவதற்காக கும்பகோணம் சென்றார். மேற்படி டாடா ஏசி ரிப்பேர் ஆனதால் மற்றொருவரின் இருசக்கர PY 02 5806 Bajaj Discover என்ற வாகனத்தில் கும்பகோணத்திலிருந்து அவரது வீட்டிற்கு சங்கரன்பந்தல் நோக்கி வந்துகொண்டிருந்தார். நானும், இறந்துபோன வெங்கடேசனின் அப்பா அசா1ம் தார்ப்பாய் வாங்குவதற்காக இருசக்கர வாகனத்தில் மங்கநல்லூர் சென்றிருந்தோம். வெங்கடேசன் கும்பகோணத்திலிருந்து மங்கநல்லூர் வந்திருந்தான். அவருடன் சேர்ந்து நானும் அசா1ம் வெங்கடேசனின் வாகனத்திற்கு பின்னால் எங்களது இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தோம். மதியம் சுமார் 03.00 மணியளவில் மயிலாடுதுறை To பொறையார் சாலையில் மேலப்பெரமபூர் பிள்ளையார்கோவில் அருகே வெங்கடேசன் அவரது வாகனத்தை ரோட்டின் இடதுபுறமாக ஓட்டிச்சென்றபோது

எதிரே TVS Star City என்ற இருச்சக்கர வாகனத்தை ஆஜர் எதிரி குடித்துவிட்டு வெங்கடேசன் சென்ற பாதையிலேயே தவறாக வளைவில் ஓட்டி வந்து வெங்கடேசனின் வாகனத்தில் மோதியதில் வெங்கடேசன் தூக்கி எறியப்பட்டு வெங்கடேசனின் தலையில் அடிப்பட்டு நெற்றி, வாய் வழியாக இரத்தம் வந்தது. ஆஜர் எதிரியும் மற்றொருவரும் வந்த இருசக்கர வாகனமும் கீழே விழுந்ததால் ஆஜர் எதிரியை தூக்கிவிட்டுவிட்டு டாடா ஏசியில் அடிப்பட்ட வெங்கடேசனை மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனைக்கு அசா1ம் நானும் வெங்கடேசனை சிகிச்சைக்கு அழைத்துச்சென்றோம்,. அங்கு முதலுதவி செய்தபின்னர் திருவாரூர் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்ற பின்னர் தஞ்சாவூர் மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் அழைத்துச்சென்றபோது செல்லும் வழியிலேயே வெங்கடேசன் இரவு சுமார் 08.30 மணிக்கு இறந்துவிட்டார். பின்னர் மீண்டும் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு வெங்கடேசனின் உடலை கொண்டுவந்துவிட்டோம். பின்னர் போலீசார் மருத்துவமனையில் எங்களை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இறந்தபோன நபர் எங்கள் ஊர்காரர் என்றால் சரிதான். வெங்கடேசனுக்கு பின்னால் நாங்கள் சென்ற தூரம் எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 60, 70 அடி தூரத்தில் சென்றோம். விபத்து நடந்த இடம் என்பது வளைவு என்றால் சரிதான். வளைவில் சென்றபோது இறந்தவரின் வண்டியைத்தான் பார்த்தேன் என்றாலும், எதிரே வந்த வண்டியை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். வளைவு என்பதால் நான் பார்க்கவில்லை. எதிரி குடித்துவிட்டு வண்டியை ஓட்டினார் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லிஉள்ளேனா என்றால் சொல்லவில்லை. இந்த வழக்கின் புகாரை எப்போது, யார் கொடுத்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் இரண்டு நாட்கள் காவல் நிலையம் சென்றோம் எப்போது புகார் கொடுத்தார் என்ற விபரம் தெரியவில்லை. எதிரியின் அஜாக்கிரதையோ, கவனமின்மையோ இந்த விபத்துக்கு காரணம் இல்லை என்றாலும், இறந்துபோனவரின் அஜாக்கிரதைதான் இந்த விபத்துக்கு காரணம் என்றால் சரியல்ல. புகார்தாரரும், விபத்தில் இறந்தவரும் எனக்கு வேண்டியவர் என்பதாலும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.